பெரியாரும் சினிமாவும்

137

R34wM79
N54
813

ரைமன்னன்

பெரியாரும்-
சினிமாவும்

5

மதுரைமன்னன்

செல்வம் பதிப்பகம்
வெண்கலக்கடைத் தெரு...... மதுரை.

பதிப்பு — '53.

விலை 4 அணா

உரிமை உடையது.

பெரியாரும் சினிமாவும்

(மதுரைமன்னன்)

"இதிகாச புராணக் கூத்துகளை விலக்க வேண்டும். புராணக் கூத்தாடிகளை ஆதரிக்கவே கூடாது.

இதிகாச—புராண சினிமாக்களுக்குச் செல்லவே கூடாது.

இதுவே புத்தாண்டுக்கு நான் தரும் அவசரத் திட்டமாகும்."

—ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு, தைப்பொங்கல் நாளிலிருந்து ஆரம்பமாகும் புத்தாண்டுக்கு ஈரோடு ஈன்ற இராமசாமியார் தந்த 'புத்தாண்டு வாழ்த்துச் செய்தி' மேலே தீட்டப்பட்டவை.

"கூறியிருப்பாரா இவ்வாறு?"—என்று இம்மியளவு ஐயம் நேர்ந்தாலும், ஐயமேற்பட்ட யாரும் 24—1—1948 'குடிஅரசு' இதழைப் புரட்டிப் பாருங்கள்!

இவ்வாறு கூறியிருந்தால், சினிமா, நாடகம் பார்க்காதீர்கள்—என்ரு அர்த்தம்? கூத்துக்கலை நாட்டின் படப்பிடிப்பாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில்—நாட்டு மக்களுக்குப் பகுத்தறிவு ஊட்டும் கலையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுப்பிய வார்த்தைக் கோர்வை தான் நாம் மேலே கண்டவை!

கூத்துக்கலையை அடியோடு வெறுத்துவிடச் சொல்லவில்லை. சினிமாவைப் பகிஷ்கரிக்கச் சொல்லவில்லை.

இதிகாச புராணக் கூத்துகளே விலக்க வேண்டும் என்று தான் விளக்கியிருக்கிறார், அதனல் நாட்டுக்கு எந்த விதமான நன்மையும் இல்லே என்ற காரணத்தால்!

அவர் கூறிய காலம்—நம்மைச் சிந்திக்கத் தூண்டும் காலம். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பகர்ந்தாற் போல,

என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்;
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூருக!
ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லே, உயிர் உள்ளதில்லே!
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா யில்லே!
ஒன்றேனும் உயர் நோக்கம் அமைந்ததுவா யில்லே!
ஒன்றேனும் உயர் நடிகர் வாய்ந்ததுவா யில்லே!
ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதா யில்லே!

வடநாட்டார் போன்ற உடை, வடநாட்டார் மெட்டு!
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்! ஆங்கில ப்ரசங்கம்!
வாய்க்குவரா இந்துஸ்தான்! ஆபாச நடனம்!
அடையும் இவை அத்தனையும் கழித்துப்பார்க்குங்கால்,
அத்திம்பேர் அம்மாமி எனுந் தமிழ்தான் மீதம்!
கடவுளர்கள், அட்டைமுடி, காகிதப் பூஞ்சோலே
கண்ணுடி முத்துவடம் கண்கொள்ளாக் காட்சி!

பரமசிவன் அருள்புரிய வந்துவந்து போவார்!
பதிவிரதைக் கின்னல் வரும், பழையபடி தீரும்!
சிரமமொடு தாளமெண்ணிப் போட்டியிலே பாட்டுச்
சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து
வரும் காதல்! அவ்விதமே துன்பம் வரும், போகும்!
மகரிஷிகள் கோயில் குளம்—இவைகள் கதாசாரம்.
இரக்கமற்ற படமுதலாளிக் கெல்லாம் இதனல்
ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியது லாபம்!

படக்கலைதான் வாராதா என நினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்,
படக்கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்!
பயன் விளைக்கும் விதத்தினிலே பல செல்வர் கூடி
இடக்ககற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி
இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்துப்
படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்
படமெடுத்தாடும்; தமிழர் பங்கமெல்லாம் போமே!

மேற்கண்டவாறு எதிர்பார்த்திருந்த காலம். அந்தக் காலத்தில் படம் என்றால், பரமசிவன் 'டொய்ங்' என்ற பின்னணியுடன் உதயமாவார். பதிவிரதைக்கு இன்னல் வரும்—ஆச்சாரியார் ஆட்சியிலே தமிழ் மக்களுக்குக் கேடு வருவதைப்போல! அரசாங்கத்துச் சட்டப்படி குழந்தையைக் கொலை செய்வது பாபம் என்றிருக்கும். ஆனால் ஒரு பரதேசிக்காக தாம் பெற்ற பிள்ளையை தாயும் தந்தையுமாகச் சேர்ந்து கழுத்தை அறுத்து கறி சமைத்து படைத்ததால் தாய் தந்தையருக்கு முக்தியளிப்பார் பரமசிவன்!— இது படத்திலே!

நாட்டிலே கொலை செய்வது தண்டனைக்குரியது! ஏட்டிலே கொலை செய்யச் சொல்லி வற்புறுத்தி முக்தியளிக்கும் மகத்தான பக்தி!

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற 'பிழைப்பு' கெட்ட பழமொழிப்படி தன் கணவனை தேவடியாள் வீட்டுக்கு, கணவன் எழுந்து நடமாட முடியாத நேரத்திலும் கூடையில் வைத்துத் தூக்கிக்கொண்டுபோய்ச் சேர்த்து 'டாபர்' வேலை பார்த்து விபசாரத்தைப் பெருக வைக்கும் நளாயினி கதைகள் நாட்டிலே நாடகமாக நடத்தி காட்டப்பட்டுக் கொண்டிருக்கும். அதே சமயம் விபசாரத் தடை மசோதாவும் அரசாங்கத்தாரால் விளம்பரப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும்.

'இவற்ருல் ஆய பயன் என் கொல்?' என்ற பொருள் விளங்கும்படிதான் ஈரோடுதந்த செல்வம், தமிழ் நாட்டுக்குத் தலைவராக விளங்கிய தந்தை, திராவிடத்தின் திசைகாட்டி, பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் கூறினர் நாற்பத்தெட்டாம் ஆண்டிலே!

அவர் கூறியது, "படக்கலைதான் வாராதா எனநினைத்த நெஞ்சம் பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால், படக்கலையாம் சனி யொழிந்தால் போதுமென எண்ணும்" என்ற அடிப்படையிலே எதிர்பார்த்ததற்கு ஏமாற்றம் விளைகிறதே என்ற உள்ளக் குமுறலுடன் இதிகாச—புராணக் கூத்துக்களை விலக்கவேண்டும் என்று புத்தாண்டுக்கு வாழ்த்துச் செய்தியாகக் குறிப்பிட்டிருந்தார்!

பெரியார் கூறியவை பெரிதும் வரவேற்கப்பட்டன, அன்று! ஆனல் அதே பெரியார் சினிமாவே கூடாது என்று கூறுகிருர் ஐம்பத்து மூன்றிலே! இடையிலே ஐந்து ஆண்டுகள் ஓடியிருக்கின்றன! அந்த ஐந்து ஆண்டுகளில், சினிமாவிலென்ன நல்லதங்காள்களும், அல்லியரசாணிகளும், துரௌபதிகளும், கிருஷ்ண லீலாக்களும் பெருகிப் போய்விட்டனவா?

சிந்திக்க வேண்டிய விஷயம்தான்! கலைஞனுக இருக்கும் ஒவ்வொருவனும் சிந்தித்தே தீரவேண்டும். அதன் பிரதிபலிப்புதான், பெரியாரும் சினிமாவும்!

அதற்குள் சினிமா உலகில் 'மஹாப் பிரளயம்' உண்டாகி, 'நாகஸாக்கி' போல நாசமாக்க 'நடனக்காரி' உருவில் உலவ ஆரம்பித்துவிட்டதுவா அணுகுண்டு? அல்லது மதப் பதர்கள்—தப்புத் தப்பு—'க்' தவறிவிட்டது-மதப் பக்தர்கள் கூறுவது போல, கலியுகம் காலனுடைய காலில் தஞ்சமடைந்துவிட்டதுவா? என்ன நேர்ந்துவிட்டது, இந்த இடைக் காலத்திலே சினிமா உலகுக்குள்?

கலைஞர்களுக்கு மட்டுமல்ல—ஆராய்ச்சியாளர்களுக்கும் உள்ளம் குமுறுது —பொறுமும். ஏனெனில், கூறியவர் பெரியார், பெரியார் என்று போற்றப்பட்டவர்—பக்தர்களால், பகவான் பகவான் என்று போற்றப்பட்ட 'பிள்ளையார்' போல! எனவேதான் அப் பெரியவரது வாயசைப்புக்கு செவிசாய்த்தது அன்று!

இன்றும் நாடு செவி சாய்க்கிறது. என்றாலும் சீர்தூக்கிப் பார்க்கிறது. அதன் முடிவுதான் ஐந்து ஆண்டுகளில் அவர் தந்த மாற்று வரப்பிரசாதம் பற்றிய ஆராய்ச்சி!

ஆரம்ப காலத்திலிருந்தே 'சினிமாவைப் பகிஷ்கரியுங்கள்; நாடகத்தைக் காணச் செல்லாதீர்கள்' என்று கூறி வந்திருந்தாரானால், அவர் தற்போது கூறியவை பற்றிப் புதிதாக எதுவும் சிந்தித்துப் பார்க்கவோ, சீர்தூக்கி நோக்கவோ மாட்டோம்! முன்னுக்குப் பின் முரண் இருக்கும் காரணத்தால் பெரியாரோ, அல்லது நாமோ முடிவுக்கு வந்தே தீரவேண்டும்.

எனவேதான் பெரியார் ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டாம் ஆண்டு விடுத்த புத்தாண்டுச் செய்தியை நாம் நினைவு படுத்த விரும்புகிறோம், மக்களுக்கு!

'டோபா' முடிக்குப் பதில் 'கிராப்புத்தலையும், தொங்கு மீசைக்குப் பதில் 'சின்னப்பா மீசை'யும், ஷேர்வானி ஸூருவாலுக்குப் பதில் பேன்ட் இன்ஸெர்ட் ஷர்ட்டும், திரௌபதிக்குப் பதில் 'தியாகவல்லி'யும் காட்சியளிப்பது அவருக்குப் பிடிக்காதது என்பது 10—4—48ல் 'குடிஅரசு' இதழில் தீட்டப்பட்டிருந்த வேலைக்காரி நாடக விமர்சனத்தைப் படித்துப் பார்த்தவர்களுக்கு நன்கு விளங்கும்.

அவர் கூறிவந்த கொள்கையை அழகுபடச் சித்தரித்துக் காட்டினார்கள் மதிப்பிற்குரிய அண்ணாதுரை, சிற்றரசு, கருணாநிதி முதலியவர்கள் தங்களது சந்திரோதயம்,

சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம், கல் சுமந்த கசடர், ஓர் இரவு, வேலைக்காரி, போர்வாள், தூக்குமேடை மந்திரிகுமாரி, ஒரே முத்தம் முதலிய நாடகங்களின் மூலம்!

நாட்டின் சரித்திரத்திலே ஏட்டைப் புரட்டிவிட்டார்கள் பகுத்தறிவுப் பாசறையில் பயின்று வந்தவர்கள்! காட்டைக் கழனியாக்கி விட்டார்கள் காவிய நாடகங்களின் மூலம்!

மகிழ்ந்தார், மகிழ்ந்தார், மகிழ்ச்சியின் மூல ஸ்தானத்துக்கே சென்று மகிழ்ந்தார் பெரியார்!

தமிழ் நாட்டில் சமூக சீர்திருத்தமே உயிர் நாடியாகக் கொண்டுள்ள ஒரு இயக்கமும், அதிலே ஒப்பற்ற ஓர் அறிஞரும் இருப்பதை உணர்ந்து, பயன்படுத்த ஒரு கம்பெனிக்காரரும் துணியாத நேரத்தில், 'வசூலாகுமா?' என்று தோன்றிய ஐயப்பாட்டையும் உதறித்தள்ளிவிட்டு அறிஞர் அண்ணாதுரை அவர்கள் எழுதிய நாடகங்களை முதன் முதலாக நடிக்கத் துணிந்த தோழர் கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ண நாடக சபையாரையும் போற்றிப் புகழ்ந்தார் ஈ. வெ. ரா. பெரியார் என்பதை 10–4–48ல் 'குடிஅரசு' நமக்குப் படம் பிடித்துக் காட்டியது. நாமும் மகிழ்ந்தோம். மதுரையிலிருந்து தஞ்சாவூருக்குச் சென்று, மாயவரத்திலிருந்து திருச்சிக்குச் சென்று, சென்னையிலிருந்து பெங்களூருக்குச் சென்று சமூக சீர்திருத்த நாடகங்களைக் கண்டு ஆனந்தித்த மக்களைக் கண்டோம்.

நாடெங்கும் நாடகக் கலையின் மறுமலர்ச்சி பற்றிப் புகழக் கேட்டோம். 'பரஞ்சோதி' சரித்திரத்தைக் கண்டவர்கள் 'போர்வாள்' காண நேர்ந்தது. 'சாவித்திரி'யைக் கண்டவர்கள் 'சந்திரோதய'த்தைக் காண நேர்ந்தது. 'இராமாயணம்' கண்டவர்கள் 'கினஜா பி. ஏ.'வைப் பார்க்க

நேர்ந்தது. அப்போதெல்லாம் நாட்டின் மறுமலர்ச்சியை உணர்ந்தார்—மகிழ்ந்தார்—புகழ்ந்தார்!

ஆனால், புகழ்ந்தவர் இகழ்கிறார்! புகழ்ச்சி நிலைத்து மகிழ்ச்சியடையச் செய்யவில்லை நம்மை! நாற்பத்தெட்டு வரை புகழ்ச்சி! ஐம்பத்து மூன்றிலே இகழ்ச்சி! ஏன் இந்த நிகழ்ச்சி?

வந்தனை செய்தவர் நிந்தனை செய்யக் காரணம்? சாதாரண மாணிக்கவேலுவை, ரெவின்யூ இலாகா அமைச்சர் மாணிக்கவேலராக ஆச்சாரியார் மாற்றிவிட்டதுபோல, எவரும் மாற்றி விட்டார்களா, ஏதோ ஒரு காரணத்தைக்காட்டி? —பொதுமக்கள் இவ்வாறு பேசினர். கலைஞர்கள் புண்பட்டனர். ஆராய்ச்சியாளர்கள் சிந்திக்கத் துவங்கினர்!

அந்தச் சிந்தனையின் படப்பிடிப்புதான் பெரியாரும் சினிமாவும்! நாம் தயாரித்துள்ள சினிமாவை ஓட்டிக் காண்பிக்கிறோம், பெரியாருக்கும், மற்ற இரண்டு ஆச்சாரியார்களுக்கும்! இனி திரையிலே காணுங்கள், விளக்கத்தை! படச்சுருள் ஓடுகிறது.

* * *

பெரியாரும் சினிமாவும்

கதை வசனம்: 'நான்' (மதுரைமன்னன்)

தயாரிப்பு: செல்வம் பதிப்பகம்.

கலையின் சார்பிலே பேசுகிறேன், பாடுகிறேன், ஆடுகிறேன். கலை, கலைக்காக மட்டுமின்றி நாட்டு மக்கள் நல்வாழ்வின் படப்பிடிப்பாகவும் இருக்கவேண்டும் என்பது தான் என் அவா!

ஆரம்பத்தில் என்னை திரௌபதையிடத்திலும், நளாயினியிடத்திலும் ஒப்படைத்துச் சித்ரவதை பண்ணினார்கள் முதலாளிகள்! பொதுமக்களும் 'பேஷ், சபாஷ்!' போட்டனர், புராணப்போதையிலே புத்தியைப் பறிகொடுத்திருந்த காரணத்தால்! ஆனால், நாட்டிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் பலப்பட்டு, என்னையும் அந்தப் பாதைக்கு இழுத்துச் சென்றனர், பண்புமிக்க பைந்தமிழர்கள்!

அதன் எதிரொலியாகத்தான், 'மங்களேஸ்வரி'யாக இருந்த நான் 'மந்திரி குமாரி'யாக காட்சியளிக்க நேர்ந்தது. 'விக்ரம ஸ்திரீ சாகஸமாக' விளையாடிக்கொண்டிருந்த நான் 'வேலைக்காரி'யாகப் பவனிசெல்ல முடிந்தது. பக்திப் புழுக்களின் பக்கத்திலே பாதக சக்தியாக — பத்ரகாளியாக வீற்றிருந்த நான், பகுத்தறிவு படைத்த பாவை 'பராசக்தி'யாகப் பாதையிலே நடக்க முடிந்தது. இத்தனைக்கும் காரணம், என்னை அன்றிலிருந்து சுயநலத்துக்கே பயன்படுத்திவந்த சங்கராச்சாரிகளோ, ராஜகோபாலாச்சாரிகளோ அல்ல என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது என் தலையாய கடமை!

'தியாகபூமி'கள் தோல்வியடைந்த காரணத்தால் என்னைத் திட்டியவர்களின் 'வமிச பரம்பரை' அந்த இருவரும்! 'மீரா' சீராக இல்லாததன் காரணமும், கலையின் நிலையைக் கொலை செய்த காதகர்களின் பார்வைக்கு நானாகத்தான் பட்டேன். தமிழ் நாட்டில் எடுக்கப்படும் படங்களில் தமிழ் மொழியிலே இல்லாத 'பார்ப்பனச்சேரி' வசனங்களைப் புகுத்தி தமிழுடன் என்னையும் அழித்துவிட வேண்டுமென்று கணக்கிலடங்காக் 'கதீட்ரல்கள்' கத்தியைத் தீட்டிக்கொண்டு வந்தன. நானும் இறக்கும் தறுவாய்க்குச் சென்றுவிட்டேன்.

கடைசி நேரம்! தொண்டைக்கும் நெஞ்சுக்கும் இழுத்துக்கொண்டிருந்தது உயிர்! அப்பொழுதும் 'அக்ஷரம்'

பிசகாத 'அம்மாமித் தமிழ்' கொண்டு என்னைத் தாக்கிவந்த 'கொ. சு.' பரம்பரையினர்—அது தான் அந்த இருஆச்சாரி யார்களும்! எனவே தான், ஆச்சாரியார்கள் என்னைப் பார்க்கச் சொன்னாலும் சரி, பார்க்காதே என்று சொன்னாலும் சரி, அதற்காக நான் கவலைப்படப் போவதில்லை—மூன்று மாதங்களில் தி. க., தி. மு. க. வை ஒழித்துக் கட்டுவேன் என்று ஆற்றோடு கூறிவிட்டு, எங் கேயோ 'அன்டர் கிரவுண்டி'ல் அடையாளம் தெரியாமல்—அட்ரஸ் இல்லாமல் வசித்து வரும் கபோதி, 'கோழை முத்து'வைப் பற்றி தி. மு. க. கவலைப்படாமலிருந்து கண் ணியத்தைக் காப்பாற்றியதை மனதிலிறுத்தியதால்!

பாஷாணப்பாதையில் சென்று கொண்டிருந்த எனக்கு —கண்ணைத் திறந்து நல்ல பாதையினைக்காட்டி—'பகுத்தறி வுப் பாதையிலேயே பல்லாண்டு சிறந்து பல்கி வளர்க' என்று தேனமுது ஊட்டிய திராவிட இயக்க வீரர்களின் தன்மானத் தந்தையான பெரியார், நாற்பத்தெட்டிலே என்னை வரவேற்று இதோபதேச உபசாரம் செய்து, இன் மொழிகூறி, வாழ்த்துப்பா நல்கி, வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள, வழி காட்டிய பெரியார் இன்று என்னை எதிர்க் கிறார் என்றால், உள்ளபடியே என் உள்ளம் எரிமலையாகி விடவில்லை—கொந்தளிக்கவில்லை—குமுறவில்லை—புழுங்கியது —கசங்கியது—வருந்தியது—வெட்கப்பட்டது—வேதனைப்பட் டது—வெற்றிகாண மாட்டோமா என்று விசாரப்பட்டது.

வாழ்த்திய பெரியார் தாழ்த்துகிறார்! பூமாலை சூட் டிய பெரியார் சாவோலை நீட்டுகிறார்! என்நிலை எப்படி இருக் கும்?

தமிழ்நாட்டிலே பழமொழி ஒன்று சொல்லுவார்கள், 'வளர்த்தகடா மார்பில் பாய்கிறதே' என்று! இதனை சிந்திக்க வேண்டும். தன்னால் வளர்க்கப்பட்ட கடா தன் மார்பி லேயே பாய்வதென்றால், யாருக்குத்தான் பிடிக்கும்? இது எஜமானத் துரோகமல்லவா? இது போன்ற ஒரு படலம்,

நடத்திக் காட்டப்பட்டுவிட்டதாகவே நினைத்துத்தான் நான் கண்ணீர் சிந்தினேன்.

பெரியாரின் உதவியால்தான், குற்றுயிராகக் கிடந்த நான் நலம்பெற்று உலவும் நிலைக்கு வந்துவிட்டேன் என்று சிந்தை மகிழ்ந்திருந்தேன் — அவர்தம் அருமைப் பிள்ளைகளின் விடாமுயற்சியும், இடையரு உழைப்பும் சேர்ந்து என்னைக் கட்டிக் காத்ததால்! ஆனால் தந்தைக்குச் சமமான பெரியார் குழந்தைக்குச் சமமான என்னைப் "பராமரிக்காதே, பட்டினிபோட்டுக் கொல், பகிஷ்காரம் செய்" என்று பயமுறுத்துகிறார்!

பெரியாரே அடிக்கடி கூறியிருக்கிறார், பெற்ற குழந்தையைக் கொன்று கறி சமைத்துப் பித்தனுக்குப் பரிமாறிச் சித்தமிழந்த பக்தன் பரஞ்சோதியின் வரலாற்றை! பிள்ளையைக் கொலை செய்த தந்தையை நாம் என்னவென்று முடிவு கட்டுவது?—என்றெல்லாம் பேசியிருக்கிறார். அடிக்கடி கேட்டிருக்கிறேன் நான்.

அதைப்போல எனக்கு நல்ல பாதை காட்டி, இடையிலே கிணறு தோண்டிக் குதிக்கச் சொல்லுகிறார். தானே பாதை காட்டி, நல்வழிப்படுத்தி கலைக்கு ஓர் இலக்கியமாய் என்னைச் சமைத்து; விதவைக் கோட்டத்தில் சூறையாடிக் காற்றிலே கிளம்பிடும் 'பிள்ளையோ பிள்ளை' என்ற கூக்குரல் போல, ஏலம் போடுகிறார்—விலை பேசுகிறார்—ஒழிந்து போகச் சொல்லுகிறார் என்றால் என் நிலையினை எடுத்துக் கூறத் தேவையில்லை!

பகுத்தறிவுத் தந்தையா, பட்டாச்சாரியாராக மாறுகிறார்? அறிவுலகு அகமகிழ அரும்பெரும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த அய்யாவா ஆச்சாரியாரின் அடிச்சுவற்றைப் பின்பற்றுகிறார்?—என்று கண்ணீர்த் துளிகளைக் கலைக்கு காணிக்கையாக்கினேன்.

எனக்கு அவரைத் திட்டுவதற்குக்கூட உரிமையிருக்கிறது, 'அய்யா அய்யா' என்று அவர் வழி நடந்துவந்த காரணத்தால்! இருந்தும் கண்ணீர்த்துளிகளைத்தான் காணிக்கையாக்கினேன்.

மாரடித்து அழுது புலம்பிவிட்டு மாருத சோகத்தோடு மல்லாந்து படுத்துவிடவில்லை நான்! மாருகப் பரிகாரம் தேட எண்ணினேன்—சிந்தித்தேன்—மூளை குழம்பியது!

கண்டுபிடித்துவிட்டேன்! காரணத்தைக் கண்டு பிடித்துவிட்டேன். என்மேல் அவருக்கு வெறுப்பில்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டேன். யார் மேலோ காட்டவேண்டிய வெறுப்பைச் சூசகமாக என்மேல் காட்டுகிருர் என்பதைத் தெள்ளத் தெளியத் தெரிந்து கொண்டேன்.

'அடுத்தவர் மேல் கொண்ட வெறுப்பை, பொதுமக்களின் பொழுது போக்குக்கு உபயோகப்படும் என்மேல்— அறிவுத்துறை சிறிதளவு திருந்துமாறு சமூக சீர்திருத்தம் செய்துவரும் என்மேல்—நான் 'நாட்டின் கண்ணுடி, காலத்தின் படப்பிடிப்பு' என்பதையும் மறந்து என்மேல் காட்டுகிருரே ஈ. வெ. ரா. பெரியார்' என்று ஏங்கினேன்.

தோழமை கொண்ட அவர், ஏளனம் பேசியது எனக்குப் பிடிக்கவில்லை. எனவே தான் என்னைப் பற்றித் தெளிவாக எல்லோருக்கும் படம் பிடித்துக் காட்டவேண்டுமென்று எண்ணினேன். காட்சிக்குத் தயாராகி உங்கள் முன்னிலையில் படமாகவே ஓடிக்கொண்டிருக்கிறேன்.

திராவிடக் கழகத்திலிருந்த கலைஞர், அறிஞர் குழு, அவரது திருமணம் காரணமாக விலகி—திராவிட முன்னேற்றக் கழகமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. தன் கட்சியிலிருந்து விலகியவர்களுக்கு மக்கள் மத்தியிலே மட்டு

மில்லாமல் சினிமா உலகிலும் மதிப்பு ஏறிக்கொண்டே வருகிறதே! சினிமா உலகம் இல்லையென்றால் அவர்களால் முன்னேற முடியாது! திராவிட முன்னேற்றக் கழகம் என்றால், வீசை என்ன விலைக்குக் கிடைக்கும் என்ற பொறாமைதான்—அவர் 'சினிமா பார்க்காதே' என்று சொன்னதற்குக் காரணம் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டேன்.

இதனை நினைக்கும்போது, எனக்கு ஒரு வாசகம் நினைவுக்கு வருகிறது.

"சக்கனிராஜ மார்க்கமு உண்டகா
சந்தலு தூரேதி எந்துகு?"

இதன் முழுப்பொருள் என்னவென்றால், 'நேர் வழி இருக்கையில் கோணல் வழி எதற்கு?'—என்பது!

பழங்கால நாவல் பாஷையிலே கூறவேண்டுமெனில், "அஹோ, வாரும் பிள்ளாய் பிரயாணியே! செல்லவேண்டிய தூரம் ராஜபாட்டை வழியே சென்றால் இரண்டு கல் தூரம் தானே! அதைவிடுத்து, கல்லும் முள்ளும் படர்ந்த கள்ளிக் காட்டின் வழி இருபத்தி ஏழு கல் தூரம் எதற்கு நடக்க வேண்டும்?" என்பது!

சொல்லவேண்டியதை நேரடியாகச் சொல்லிவிட்டால், புண்பட வேண்டியவர் இருவர் தானே! அதைவிட்டு, அவர்கள் கூட்டத்தையும் அத்துடன் என்னையும் சேர்த்து அவ்வாறு சுடுமொழி சொல்வது அழகாகுமா?

உரிமையின் பேரால் கேட்கிறேன் — பெரியார் அவர்களே, உங்களை யாருக்கு ஈடாக உவமை கூறுவது என்று?

'நல்லதம்பி' என்ற சமுதாய சீர்திருத்தப் படத்தைப் பற்றி வானளாவப் புகழ்ந்து, புகழ் மூட்டையிலிருந்து குத்தி எடுத்த புகழ்ச்சிகளைக் கீழே ஒழுக விட்டுவிட்டு, பெரியாருக்கு ஒத்து ஊதிக் கோமாளிக் கூத்தடிக்கிறார் அவர் சிஷ்யர் குததூசி! குருநாதர் மனம் கோணாமல் 'சாமியே சரணம்' என்று கூறினால்தான் சம்பளம் கிடைக்குமென்று கருதுகிறாரா? என். ஜி. ஈ.யாக இருப்பவர் ஜி. ஈ. யாக மாறிவிடலாம் என்று மனப்பால் குடிக்கிறாரா? அவர் வேறு புலம்பிப் பார்க்கிறார், முன்னுக்குப் பின் முரண்பாடாக!

மனச்சாட்சிக்கு விரோதமாக எதுவும் கூறினால், 'குத்தூசி' காதறுந்த கோணி ஊசியாகிவிடும் போலும்! அதனால் தான் குருஜி சென்ற வழியே பிரதம சீடரும் செல்கிறார் போலும்!

இதனை நினைக்கும்போது, நாட்டிலே மாமன் மைத்துனன் கேலிக்காகக் கூறி விளையாடும் ஒரு சம்பவம் என் நினைவில் நிழலாடுகிறது அதனைக் கூறத்தான் வேண்டியிருக்கிறது.

ஃ ஃ

அரண்மனையில் யானை வளர்ப்பது வழக்கம் என்று தெரிந்திருப்பார்கள் அனைவரும்! இரண்டு நண்பர்கள் ஒரு நாள் அரண்மனையைச் சுற்றிப் பார்த்து வரும்போது, யானைகளைப் பார்த்து விட்டனர். அவர்களுக்கு ஒரு சபலம் உண்டாகிவிட்டது. தாங்களும் யானை வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில், அரசனிடம் சென்று, "அரசே, நாங்கள் யானை வளர்க்க வேண்டும். ஆகையால் தாங்கள் ஒரு யானையை எங்கள்பால் மனமிரங்கித் தந்தருள வேண்டும்" என்று மன்றாடினார்கள்.

அரசர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். "யானை வளர்ப்பது மிகவும் கடினம். உங்களால் அதற்குத் தீனி வாங்கிப் போட முடியாது. அநியாயமாக ஒரு யானையைக் கொன்றுவிடாதீர்கள்!" என்று எடுத்துச் சொன்னார். நண்பர்கள் விடுவதாகத் தெரியவில்லை.

கடைசியில் ஒரு நிபந்தனையின் மேல் யானையைக் கொடுத்தார். 'யானை சரிவர பாதுகாக்கப்படாமலிருந்தால் அரண்மனைச் சேவகர்கள் யானையைப் பிடித்துக் கொண்டுவந்து விடுவார்கள்' என்பது அந்த நிபந்தனை. இருவரும் அந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு ஒரு யானையை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்று, தனியிடத்தில் யானையைக் கட்டிப் போட்டு, தினமும் காலையில் தீனியும் வைத்து மேற்பார்வையும் பார்த்துவிட்டு வருவது அவர்கள் வழக்கம்.

யானைப் பசிக்குச் சோளப் பொறி போதுமா? யானையும் நாளொரு எலும்பும் பொழுதொரு தோலுமாக மெலிந்துகொண்டே வந்தது. இந்த சமாச்சாரம் எப்படியோ அரசருக்குத் தெரிந்துவிட்டது.

உடனே சேவகர்களை அழைத்து, "இரவோடு இரவாக யானையை விடுதலை செய்துவிட்டு, அந்த இடத்திலே ஒரு எருமையைக் கொண்டுபோய்க் கட்டி வைத்துவிட்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டுவிட்டார் அரசர். காவலாளிகள் கட்டளையை அப்படியே நிறைவேற்றிவிட்டனர், அப்பழுக்கு இல்லாமல்!

மறு நாள் காலை! யானைக்குத் தீனி போட ஒருவன் சென்றான். யானையின் உருவம் மாறுதலாகத் தெரிவதைக் கண்டான். "ஐயோ, யானை இளைத்துவிட்டதே!" என்று வருந்தினான்.

அரசரிடம் முறையிடுவதற்காக நண்பர்கள் இருவரும் சென்றனர். அரசர் யானையின் க்ஷேம லாபங்களை விசாரித்தார். அதற்கு அந்த யானை வளர்க்கும் வீரர்கள் சிறு கவிதையைக் காணிக்கையாக்கினார்கள்.

"தேஞ்சாரே, மூஞ்சாரே
கொம்பும் கருத்தாரே
தும்பிச் சங்கையும்
உள்ளே இழுத்துக்கிட்டாரே!"

அரசனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. யானை தேய்ந்து முகத்தை முன்னுக்குத் தள்ளி மூஞ்சூறு போலாகிவிட்டதுவாம். வெள்ளையாயிருந்த தந்தக் கொம்புகள் கருத்துவிட்டனவாம். தும்பிக்கையை உள்ளே இழுத்துக்கொண்டதுவாம்!

"யானைக்கும் எருமைக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் யானை வளர்க்க முடியுமா?" என்ற தோரணையில் இருந்தது அரசர் சிந்திய சிரிப்பு!

பெரியாரையும் அவரது சிஷ்யரையும் சினிமா சம்பந்தமாக நினைக்கும்போது எனக்கு இந்தக் கேலிக் கூத்து நாடகம்தான் காட்சி தரும்! எனவே, அதனை இங்கு காட்சியாக்கினேன்!

ஃ * ஃ

கலையுலகில்—நாடகத் துறையில்—சினிமாத் துறையில் நாங்கள்தான் பட்டத்து யானைகள் என்று கொட்டமடித்துக்கொண்டு திரிந்த 'மொட்டைப் பாரம்பரை'யை மட்டந்தட்டி, எருமைகளாக்கி வைக்குமளவுக்குப் பகுத்தறிவுப் பணியால் நாட்டின் நற்புகழ் பெற்ற தமிழர்களுக்கு விரோதமாகப் பேசும் 'குறுக்கு நூலார்'களின் கூட்டத்திலே சேர்ந்து சுடுமொழியால் 'சினிமா பார்க்காதே' என்று வசை பாடுகிறாரே என்ற எண்ணம் தான் தோன்றுகிறது.

'சினிமாவை விடு, சிலம்பை எடு' என்று வேறு குதிக்கிறார்கள். ஆனால் சினிமாவை ஏன் விடவேண்டும் என்று காரணங்கள் கூறவில்லை, இல்லாத காரணத்தால்! சினிமாத்துறையில் நுழைந்தவர்கள் கட்சியை மறந்து நடிகைகளின் பட்டுப் புடவைகளுக்கு 'நகாஸ்' வேலைசெய்யப் போய்விட்டார்களா? பின் எதற்காகச் சினிமாவை விடவேண்டும்?

'சீரிய நற்கொள்கையினை எடுத்துக்காட்ட சினிமாக்கள் நாடகங்கள் நடத்தவேண்டும்' என்று கூறிய பாரதிதாசனாரை மேற்கோள் காட்டி பேசத் தவறவில்லை பெரியார்!

'நாட்டைச் சீர்திருத்த வேண்டுமானால் அதற்கு பலம் பொருந்திய சாதனம், நாடகம் சினிமாதான்' என்று கூறிய லெனினை எடுத்துக்காட்டிப் பேசியிருக்கிறார் பெரியார்! இவ்வாறெல்லாம் பேசிவிட்டுத்தான் இப்பொழுது 'சினிமா பார்க்காதே' என்று முழங்குகிறார்! பரிதாபம்! அந்த நேரத்தில், நாட்டுக்குத் தேவையான —உருப்படியான ஒரு காரியத்தைச் செய்ய முயற்சித்திருக்கலாம். அதை விட்டு விட்டு ஆச்சாரியாரிஸத்தைக் கடைப்பிடித்துவிட்டார்.

பெரியார் இப்படிப் பேசுவதைப் பார்த்துவிட்டு, சென்னையிலுள்ள ஆந்திரக் கலைஞர்கள் ஆத்திரக் கலைஞாராக மாறி, 'பேரு பெத்தபேரு, தாக நீலு லேது!' என்று பேச ஆரம்பித்து விட்டனர்.

எனவே, அவரை நான் கேட்டுக்கொள்கிறேன், சினிமா பார்க்காதே என்று இனி அவர் செப்புதல் கூடாது என்பதற்காக! எதிர்க் கட்சிக்காரர்களெல்லாம் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தீர ஆலோசித்து, 'சினிமா பாருங்கள்' என்று சொல்லாவிட்டாலும் 'பரவாயில்லை, பார்க்காதே' என்று கூறாமலிருக்க வேண்டும் என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

யாருக்கும் இதுவரையிலும் அளிக்காத மதிப்பைப் பெரியாருக்கு அளித்திருந்தேன் நான். அதனை அவரே அழித்துவிடாமலிருக்கவேண்டும் என்பதற்காகவே வேண்டுகோள் விடுக்க நேருகிறது. அதனை மீறி மீண்டும் மீண்டும் 'சினிமா பார்க்காதே' என்று சொன்னால், அவர் வார்த்தைக்கு மதிப்பளிக்காமல் செயல் புரிய நேரிடும் என்பதை என் பகுத்தறிவுத் தந்தையார்க்கு எடுத்துக் கூறுகிறேன்.

கடவுளர்கள் வந்து போகும் படங்களிலே, கருத்துக்களைத் தெளிக்க ஆரம்பித்தது பகுத்தறிவுப் பாசறை! பரம சிவன் அருள் பாலிப்பதாக நினைத்துக் கொண்டிருந்த பத்தினித் தங்கங்களுக்கு பகுத்தறிவு மருந்து கொடுக்கப் பட்டது அறிஞர் குழுவினரால்! படம் பிடித்துக் காட்டுவதற்கு, புராணம் தவிர வேறு கதையில்லாமல் இருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலையிலே, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தான கலை இலக்கியங்கள் பலவற்றைக் காணிக்கையாக்கிக் காட்டினர், கொடியிலே ஒரு பாதி கருப்பு இருந்தும் உள்ளத்திலே தெளிவு இருந்த உத்தம திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்! வசூலில்லாமல் வறுமையில் கிடந்த என் வாழ்க்கையை வளமாக்கி, மக்களுக்கும் என் மூலம் 'வாழ்க்கை வாழ்வதற்கே!' என்ற மணிமொழியை மனதிலிறுத்திக் காட்டினார்கள்.

'திராவிட நாடு' கோரும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களின், கொள்கைகளைப் பறைசாற்ற வேண்டுமெனில் தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் சினிமாவினால் முடியும்!

இன்று தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், தமிழ் நடிகை யார்? திருமதி ராஜகுமாரி! ஆனால் எம். வி. ராஜம்மா, வி. என். ஜானகி, லலிதா, பத்மினி, பானுமதி, பண்டரி பாய் இவர்களெல்லாம் தமிழர்களல்ல! என்றாலும்கூட திராவிடர்கள்!

சினிமாத் துறையில் திராவிடக் கூட்டாட்சிதான் நடக்கிறது—எதிர் காலத்தில் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சி அரசியல் துறையிலே நடைபெறஇருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுமளவில்! எனவே தான் 'திராவிடநாடு திராவிடருக்கே' என உண்மையான உரிமை முழக்கம் செய்வோர், தற்போதைய சினிமா நிலையை ஆராய்ந்து, கதை, வசனம், பாடல், நடிப்பு, டைரக்ஷன் முதலிய சகல துறைகளிலும் ஒத்துழைக்கக் கிளம்பிவிட்டனர். இதற்கு நாட்டு மக்களின் நல்ல ஆதரவு இருக்கத்தான் செய்கிறது.

இல்லையென்றால், நமஸ்தேயும் நமஸ்காரமும் வணக்கம் என்ற மாற்றத்துக்கு உட்பட்டிருக்க முடியுமா? 'வறேளா? போறேளா?' என்றவார்த்தைகள் 'வருகிறீர்களா? போகிறீர்களா?' என்று மாற்றம் அடைந்திருக்க முடியுமா? அம்மாமித் தமிழெல்லாம் அழகுத் தமிழாகியிருக்குமா?

இதன் காரணம், பகுத்தறிவுப் பாசறையிலே பயின்று வந்தவர்கள், சினிமாவுக்காக—அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டதுதான்! இப்பொழுது சினிமாவிலே, பரந்தாமன் கன்னியரின் கற்பைக் களவாடிவிட்டு நாட்டிலேயே வாழ முடியாது. பாமாக்களே அதற்கு முடிவுகட்ட ஆரம்பித்துவிட்டதாக இப்பொழுது படங்கள் காட்டப்பட்டு வருகின்றன. பரந்தாமர்கள் இனி வாழ முடியாது என்ற நீதியை மட்டுமல்ல, 'பாமாக்கள்' முன்னேறிக்கொண்டு வருகிறார்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றனர் திரையுலகிலே!

'அண்ணாவின் புரட்சி' நாட்டிலே எவ்வாறு பரவியிருக்கிறது, பயன்படுகிறது என்பதை மக்கள் திரையிலே கண்டு களித்தார்கள். வாழ்க்கையிலே கடைப்பிடிக்கும் ஒரு அம்சமாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், அறிவுத் துறையிலே தவழ்ந்து, ஆதிக்கத் துறையில் எதேச்சாதிகாரத்தை முறியடிக்க முழுப் பொறுப்புள்ளவர்களாக வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள்—வாகை சூடத் தயாராக இருக்கிறார்கள்.

'திராவிடம்' என்றால் என்ன என்று தெரியாத கிராமங்களிலெல்லாம் இப்பொழுது திராவிட முழக்கம் பலப்பட்டு வருவதற்கு, சினிமாவும் ஒரு காரணம்!

சினிமாவில் தி. மு. க. செய்த புரட்சியின் பலனை விவரிக்க வேண்டுமா? ஓரிரு சம்பவங்களை மட்டும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

"வேண்டாம் சித்தி, வேண்டாம்! பூஜை, புனஸ்காரம், நேமம், நிஷ்டை இதெல்லாம் இனிமேல் நமக்கு வேண்டவே வேண்டாம்" என்று வசனம் எழுதுமளவுக்குப் படஉலகம் முன்னேறியிருக்கிறது.

"சந்தேகம், மனிதனின் சந்தோஷத்தை மட்டுமல்ல, வாழ்க்கையையே கெடுத்துவிடுகிறது" என்ற வாக்கியத்தை அடிப்படையாக வைத்துத் தமிழ் நாட்டில் படம் எடுக்கும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

'கல்லக்குடி' போராட்டத்தில் கருணாநிதி சிறைப்பட்டார் என்று கேள்விப்பட்டவுடனேயே, மதுரை மாவட்டத்தில் உள்ள—புகைவண்டி நிலையங்கள் இல்லாத—சிற்றூர்ப் பகுதிகளில் உள்ள பொதுமக்களில் பலர் உள்ளங்கள் குமுறின என்பதோடு மட்டுமல்ல, திராவிடர்களின் உரிமைப் போராட்டத்தில் எவ்வாறு பங்கு கொண்டிருக்கின்றனர் என்பதை, பெரியார் பள்ளிகளின் முன் மறியல் தொடங்கிய போது மிகத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது.

அந்த நிகழ்ச்சியை அப்படியே தருகிறேன்—பெரியாரும், அவர் தம் அருமைச் சிசுக்களும் அறிந்து கொள்ளட்டும் என்பதற்காக! ஆரம்ப பள்ளிகளின் முன், நடந்த மறியலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாமனாரும், அவருடைய அருமை மருமகனும் தேவாரத்துக்குப் பக்கத்து கிராமத்தில் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறைச் சாலைக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

சிறைச்சாலைக்கு வரும் தோழர்களை வரவேற்று, விபரமறிந்தவர்களின் பட்டியலில் நானும் ஒருவனாக இருந்ததால், அவர்களது விபரமும் அறியவேண்டியதாயிருந்தது. அவர்கள் முதலில் இருவருமாகவே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதனைச் சற்று கவனிப்போம்!

"மாப்பிள்ளே! நீ வேணும்னா ஜாமீன்ல போ! நான் போறாப்புல இல்லே!"

"இல்லே மாமா! சுண்ணாம்பு ஐநூறு ரூபாய்க்குத்தான வாங்கிப்போட்டிருக்கோம்! அதை அவ கவனிச்சிக்கிடுவா!"

"ஆமப்பா! கூடமாட உன் மாமியாளும் கவனிச்சிக்கிடுவா! நமக்கு ஒரு வாரம் தான! ஒரு நொடியிலே பறந்துடும்!"

இப்படிப் பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்தபோது, நாங்கள் சென்றோம்! ஜாமீன், ஜாமீன் என்ற வார்த்தை அடிபடுகிறதே, அதன் முழுப்பொருள் என்ன என்பதை அறிய எங்களுக்கு ஆசை இருந்தது!

"கருணாநிதியின் கதையென்றால் எங்களுக்கு ரொம்ப பிடிக்கும். அவரு கதை எழுதினதுன்னா ஏழு மைல் நடந்தாவது போயிட்டு வந்துடுவோம்! அவ்வளவு அழகாக எழுதுவாரு! அவரைப் போயி இந்த சர்க்கார்ல பிடிச்சி ஜெயில்ல போட்டுட்டாகளாம்! எங்க ஊருல ரயிலுடேஷன் இல்லே! இருந்திருந்தா, அன்னைக்கே ரயிலுச் சங்கிலிய இழுத்து ஜெயிலுக்குப் போயிருப்போம்! எங்க ஊர்ல, பள்ளிக்கூடத்து மறியல் வருது. அப்போ வேணும்னா நீங்க மறியல் பண்ணி ஜெயிலுக்குப் போங்கன்னு சொன்னாங்க! அது போல மறியல் பண்ணி வந்துருக்கோம்! நாங்க இப்ப ஜெயிலுக்கு வந்ததுக்கு காரணமே, கருணாநிதி தாங்க!"

"எதற்காக ஜாமீனில் போகவேண்டுமென்று நினைத்தீர்கள்?"

"நாங்க அன்றாடம் உழைச்சிக் கஞ்சி குடிக்கிறவுங்க. நான் மேஸ்திரி. இவன் என் மருமவன். கொத்தனரு. முந்தா நாள் தான், சுண்ணும்பு வாங்கிப்போட்டு, ஒரு கன்ட்ராக்ட் பேசி முடிச்சோம். சுண்ணும்பு மழையில கிழையில நனைஞ்சிடுமின்னு, இவன் பயந்தான். அதைப் பத்தி சும்மா வெளையாட்டுக்குப் பேசிக்கிட்டிருந்தோம்!"

"பெரியாரிடமிருந்து உங்களுக்கு மறியலில் கலந்து கொள்ள அழைப்பு வந்ததா? அல்லது உள்ளூர் திராவிடர் கழகம் ஏதும் அழைப்பு அனுப்பியதா?"

"பெரியாரா? ஈரோட்டு நாய்க்கரைத்தான சொல்றிங்க! அவரு சொன்னு நாங்க ஏன் மறியல் பண்றேம்! கருணநிதியைப் பிடிச்சிட்டாங்கன்னு கேட்டவுடனே, எப்படியாவது கைதியாகனும்னு நெனேச்சோம். மறியல்ல கலந்தினுபோனு கைதியாக்கிருவாங்கன்னு சொன்னுக! அதனுல தான் கலந்து வந்தோம்! நாங்க காரில வர்றபோதுகூட, 'கருணநிதியை விடுதலே செய்! பராசக்தியை விடுதலே செய்!' என்றுதான் கத்திக்கிட்டு வந்தோம்!"

இந்த நேரம்தான், மதிப்பிற்குரிய 'கிளர்ச்சி' ஆசிரியர், இரா. சு. தங்கப்பழம் அவர்கள், இலங்கை சுற்றுப்பிரயாணத்தின்போது, அவர் கண்டவற்றை என்னிடம் கூறியிருந்த வாசகங்கள் என் நினேவுக்கு வந்தன.

இலங்கையிலே, பாமர மக்கள் முதல் படித்தவர் வரை கூறுவது 'பராசக்தி பக்ச்யா ஜெயவேவா!' என்பது தானும்! இது சிங்கள மொழியிலே சித்தரிக்கப்பட்ட சொற்சித்திரமாம்! அதன் தமிழ் மொழிபெயர்ப்பு என்ன தெரியுமா?

"பராசக்தி கட்சி நீடூழி வாழ்க! பராசக்தி கட்சிக்காரர்கள் நீடூழி வாழ்க!"—என்பதுதான்.

இலங்கையிலுள்ளவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குக் கொடுத்திருக்கும் பெயர், பராசக்தி பக்ச்யா.

சினிமாவினால் நாட்டில் என்னநிலை ஏற்பட்டிருக்கிற என்பதை இனியேனும் தெரிந்துகொள்வார்களா? அல்ல இன்னமும் 'பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது பேரிக மதனுள்ளே' என்ற பழைய கள்ளைத் தான் புதிய மொந்தை யிலே ஊற்றி அருந்தப் போகிறார்களா, சினிமாவை பழிக்கும் பெரியார்கள்?

'மதம் நாட்டுக்கு நன்மை செய்கிறது—அதனை அழிக் எண்ணுபவரும், அதனை அபினி என்றவர்களும் தூக் மேடையிலே தொங்கவிடப் படுகிறார்கள்' என்று படமெடு தால், சங்கராச்சாரியார் 'சினிமா நாட்டுக்குத் தேவை என்று தான் கூறுவார்!

பகவத் கீதையையும், ராமகிருஷ்ண உபநிஷத்தையு வியாசர் விருந்துகளையும், கண்ணன் காட்டிய வழிகளையு படமாகத் தயாரித்துக் கொண்டிருந்தால்—'டெக்னிக் கலா படமாகவே தயாரித்துத் தமிழர்களின் மானத்தைத் தரை மட்டமாக்குங்கள்' என்று சவால் விடுவது போல, 'சினிமா பாருங்கள்' என்று கூறுவார் ராஜகோபாலாச்சாரியார்!

ஆனால், பெரியார்...........?

பகுத்தறிவுப் படங்கள் வந்து கொண்டிருக்கும் இந்த நேரம், 'சினிமா பார்க்காதே' என்று கூறினால் அதன் அர்த்தம், தனிப்பட்ட நபர்களுடைய செல்வாக்கின் மேல் கொண்ட பொறாமையில்லாமல் வேறு என்ன என்று எனக்கு கேட்கத் துடிக்கிறதல்லவா உடல், உயிர், நெஞ்சம் எல்லாம்!

பெரியாரும் சினிமாவும் கடலும் நதியுமாகக் கலக்கப் போகிறார்களா? அல்லது, என்றுமே சந்திக்கமுடியாத அள வுக்குள்ள இரண்டு நேர் தண்டவாளங்களாக இயங்கப் போகிறார்களா? தண்டவாளங்களாக இயங்கப் போவ தானால், முன்பு பெரியார் சினிமாவைப்பற்றி வரவேற்றுச் சித்தரித்த சித்திரங்கள் என்ன ஆவது?

சினிமா வாழ்க!

(முற்றும்)

ரத்னா அச்சகம், திருமங்கலம்—'53.

3.

எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்!

இரா. சு. தங்கப்பழம் எழுதியவை

புரட்சிப் பெண்	விலை ரூபாய்	1
கம்யூனிஸ்டு பிள்ளையார்	விலை அணா	8
தங்கையின் காதலன்	...	8
பதவி	...	8
திண்டுக்கல்லில் தங்கப்பழம்	...	4
அரசியல் குமரி	...	3

'மதுரைமன்னன்' எழுதியவை

போர்க்களத்தில் கருணாநிதி	விலை அணா	8
அழியட்டும் திராவிடம்	...	8
அண்ணாவின் புரட்சி	...	8
மந்திரி மகள் (2-ம் பதிப்பு)	...	8
ஒழிக பெண்கள்	...	6
பெரியாரும் சினிமாவும்	...	4
யார் இந்த ம பொ சி.?	...	4
குற்றவாளிக் கூண்டில் ஆச்சாரியார்	....	4
கலையுலகில் கருணாநிதி	...	4
தி. மு. க. பாடல்கள் (2-ம் பதிப்பு)	...	4
ஸ்டாலின் மரண கீதம்	...	3
மலர்த்தோட்டம் (ஆசைத்தம்பி)	...	8
மாஸ்கோவில் சர்ச்சில்	...	6
துப்பாக்கி முனையில் தி.மு.க. (அ.பிச்சை)	...	4
போலித் தலைவன் (பாண்டியன்)	...	4
இயக்கப் பாடல்கள் (கலைத்தூதன்)	...	4
ஓட்டு வேட்டை	,, ...	4

எல்லா வசனப் புத்தகங்களும் கிடைக்கும்.
விபரத்துக்கு எழுதுங்கள்.

செல்வம் பதிப்பகம்
வெண்கலக்கடைத் தெரு...... மதுரை

ரத்னா அச்சகம், திருமங்கலம்—53.